திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, நிரந்தரப் படுத்தும் திட்டம் என்று இல்லை என்று அமைச்சர் அவர்கள் மீண்டும் கூறுகிறார்கள். நான் கேட்டுக்கொள்வது அவர்களுக்கு இன்றைக்கு 195 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுவதாகச் சொல் கிறார்கள். அதையாவது உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் 1980-ல் தொடங்கி 1989-ல் முதல் திட்டம் முடிவடைந்து இருக்கிறது. டினிப்-2 என்று சொல்லப் படுகிற இரண்டாவது ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் மத்திய அரசின் நிதி உதவியோடு மாநில அரசின் உதவியையும் பெற்று இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு எவ்வளவு ஊதியம் தரப்பட வேண்டும் என்பதை மைய அரசு நிர்ணயம் செய்து இருக்கிறது. எனவே இதில் மாநில அரசு தலையிடுவதற்கில்லை.

பட்டா வழங்குதல்.

*6565—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவா ஒன்றியம், சத்திரம் கொள்ளுக்காடு ஆதி திராவிடர்களுக்குக் குடியிருக்கும் கோவில் இடத்தைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

கொள்ளுக்காடு கிராமத்தில் சுமார் 55 குடும்பங்கள் அருள் மிகு ஆத்மநாத சுவாமி கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் புல எண் 141-1ஏ மற்றும் 140-10-ல் குடியிருந்து வருகிறார்கள். இந்த 55 குடும்பங்களில் 47 குடும்பங்களுக்கு புல எண். 136-ஏ நத்தம் புறம்போக்கு நிலத்தில் ஏற்கனவே மனைப்பட்டா வழங் கப்பட்டுள்ளது. இந்நிலையில் கோவில் பட்டா நிலத்தில் மீண்டும் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கு இருக்கிற ஆதிதிராவிடர்களுக்கும் அதே பகுதியில் இருக் கிற கிறித்தவர்களுக்கும் மிகப் பெரிய கலவரங்கள் ஏற்பட்டு அதன் பிறகு அந்த அரிசன மக்களுக்கு நிச்சயமாகக் காலனி கட்டிக்கொடுக்கப்படும் என்ற முயற்சியை அரசு எடுத்துக்கொண்

டது. அந்த முயற்சிக்கு உதவியாக அவர்களுக்குப் பட்டா வழங்கப்படாத காரணத்தினால் அவர்களுக்கு காலனி கட்டித்தர முடியவில்லை. மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகவே அதுபற்றித் தெரியும். அந்த அமைச்சர் அவர்களுக்கு மீனவர்களைப் பற்றியும் தெரியும். அமைச்சர் அவர்களுக்கு இரண்டு தகுதியும் இருக்கிற காரணத்தால் அந்த அரிசனங்களுக்கு அந்த இடத்தில் பட்டா வழங்கி வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்ய அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மனைப்பட்டா பெற்ற எவரும் பட்டா பெற்றுக்கொண்ட இடங்களில் குடியேறவில்லை. வீட்டுமனை இல்லாமல் 8 உபரிக் குடும்பங்கள் மட்டுமே உள்ளன. தற்சமயம் பரம்பரையாக அவர்கள் குடியிருக்கும் கோயில் நிலத்தில் அனுபவப்பட்டா வழங்கி, அங்கே கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். 47 குடும்பங்கள் புல எண். 136-ஏ நத்தம் புறம்போக்கு மனைப்பட்டா பெற்றுள்ளன. உபரியாக இருக்கிற 8 குடும்பங்களுக்கு மட்டும் நில எடுப்பின் மூலம் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அதே நேரத்தில் மொத்த நபர்களுக்கும் விரைவாகப் பட்டா வழங்கி, அங்கே பக்கத்தில் கூட காலி இடங்கள் இருக்கின்றன, அங்கே பட்டா வழங்கி, காலனிபோல வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு முயற்சி எடுக்க வேண்டும். இதில் நீண்ட விளக்கம் தேவையென்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் திரு. சந்திரசேகரன் அவர்களைக் கேட்டால் தெரியும். ஆகவே, காலனி கட்டிக் கொடுக்க தீவிர முயற்சி எடுத்து, அரிசன மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேட்டுக்கொண்டு இருக்கிறார். அவ்வளவுதான்.

திருப்பூர் மருத்துவமனையில் எமர்ஜென்சி பிரிவு ஏற்படுத்துதல்

*3338—திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாவட்டம், திருப்பூரில் பேருந்து நிலையத்துக்கு எதிரில் உள்ள பழைய மருத்துவமனையில் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய எமர்ஜென்சி பிரிவு ஏற்படுத்த அரசு முன்வருமா?